# பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு பிரதமர் இரங்கல். நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு உதவத் தயார் என அறிவிப்பு

நவம்பர் 12, 2013

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஹையான் புயலால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் மற்றும் பேரழிவு குறித்து பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் பெனிக்னோ அகினோவிற்கு தனது இரங்கலை தெரிவித்தார். டாக்டர் மன்மோகன் சிங் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியா பிலிப்பைன்ஸ் நாட்டில் மேற்கொள்ளப்படும் நிவாரணப்பணிகள் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரதமரின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

“ஹையான் புயல் ஏற்படுத்திய சேதத்திற்காக இந்திய மக்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றேன். இந்த புயல் ஏற்படுத்திய உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதத்தின் தீவிரத்தன்மை குறித்து நாங்கள் கவலை கொண்டோம், அதிர்ச்சி அடைந்தோம். பிலிப்பைன்ஸ் மக்களின் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் இந்த அசாதாரணமான சோகம் குறித்து எங்கள் எண்ணமும், வழிபாடுகளும் அமைந்துள்ளது.

இந்த அளவு தீவிரத்தன்மை கொண்ட துயரசம்பவத்தில் இருந்து விடுபட எந்த ஒரு நாட்டிற்கும் நேரம் பிடிக்கும். பிலிப்பைன்ஸ் மக்களின் நெகிழ்வுத்திறன் மற்றும் மன உறுதி மீதும் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. இந்த இழப்புகளில் இருந்து மீள்வார்கள் என்று நம்புகிறேன். இதேபோல் உங்கள் அரசின் ஆற்றல் மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் தங்கள் வாழ்வை மீண்டும் அமைத்துக்கொள்ள நிவாரணம் வழங்குவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் அரசின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு உதவத் தயாராக இருக்கிறோம்.

எனது இந்த வாக்குறுதியை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.”